Literacy for a Billion

Movie: Yogi
Year: 2009

Song: Yaarodu Yaaro
Lyricist: Snehan

ஏய் யாரோட யாரோ
இந்த சொந்தம் என்ன பேரோ
நேற்றுவரை நீயும் நானும்
யாரோ யாரோதான்
ஓர் ஆளில்லா வானில்
கருமேகங்களின் காதல்
வெக்கை இடி மின்னல்
நெஞ்சை நனைக்குமா
வஞ்சம் கண்ட நெஞ்சம்
உருகுது கொஞ்சம்
சிறுகதை தொடர்கதை ஆகுமா
இது என்ன மாயம்
உரையாடும் நேரம்
முன்னிலவில்
விழிகளும் தடங்குமோ
நதி வந்து கடல்
சேரும்போது
புயல்வந்து மலரோடு
மோதும்போது
மழைவந்து வெயிலோடு
கூடும்போது
யாரோடும் யாரும் இங்கே
ஹே ஹே ஹே
வஞ்சம் கண்ட நெஞ்சம்
உருகுது கொஞ்சம்
சிறுகதை தொடர்கதை ஆகுமோ
இது என்ன மாயம்
உரையாடும் நேரம்
முன்னிலவில்
விழிகளும் தடங்குமோ

இதயங்கள் சேரும்
நொடிக்காக யாரும்
கடிகாரம் பார்ப்பது இல்லையே
நீரோடு வேரும் வேரோடு பூவும்
தொடர்கின்றதே

சொந்த வாழ்க்கையே
ஓர் உறவும் இல்லாமல்
உணர்வும் சொல்லாமல்
புது முகவரி தேடுதோ
வாய்மொழியும் இல்லாமல்
வழியும் சொல்லாமல்
பார்த்த கலவரம் சேர்க்குதோ
ஒரு மின்மினியே மின்சாரத்தை
தேடி வரும்போது
என்ன நியாயம் கூறு
விதிதானே ஆ... ஆ...

பறவைக்கு காற்று
பகையானால் கூட
சிறகுக்கு சேதம் இல்லையே
துளையிட்ட மூங்கில்
தாங்கிய ராகங்கள்
இசைக்கின்ற போதும் இன்பமே
சிறு விதையும் இல்லாமல்
கருவும் கொள்ளாமலே
இங்கு ஜனனமும் ஆனதே
ஒரு முடிவும் இல்லாமல்
முதலும் இல்லாமல்
காலம் புதிர்களை போடுதே
அட அருகம்புல்ன் நுனியில் ஏறி
நிற்கும் பனி போல
எத்தனை நாள் வாழ்க்கை
தெரியாதே ஏ...ஏ...
உல்லலா இல்லே இல்லே

உல்லலா இல்லே இல்லே இல்லே இல்லே
உல்லலா இல்லே லே லே

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.